HMOP.No.204/2023

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் –24.10.2025

ம.சா.1– மாரிச்செல்வி த/பெ –ஈசாக் ராஜ்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) எனக்கு ரித்திஷ் பாண்டியன் மற்றும் ரித்திகாஸ்ரீ ஆகிய இரண்டு குழந்தைகள். எனது பெற்றோர் வீடு அய்யனார் நகரில் உள்ளது. எனது கணவரின் அண்ணன் வீடு பாறைப்பட்டி தெருவில் உள்ளது என்றால் சரிதான். எனது மாமியார் வீடு பாவாலி ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். திருமணம் முடிந்து பின்னர் நான் பாவாலி ரோட்டில் உள்ள எனது மாமியார் வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். திருமணத்தின் போது 7 பவுன் நகை, எதிர்மனுதாரருக்கு ஒரு பவுன் செயின், ¾ பவுன் மோதிரம் மற்றும் சீர்வரிசை பொருட்கள் கொண்டு வந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொண்டு வந்ததாக சொல்லும் நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்கள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல.

2) திருமணத்திற்கு பின்னர் 4 மாதம் எனது மாமியார் வீட்டில் வசித்து வந்தோம். அதன் பின்னர் என் பெற்றோர் வீட்டில் குடியிருந்து வந்தோம். திருமணம் முடிந்து 4 மாதமாக என் கணவர் மற்றும் எனது மாமியாருடன் சண்டை போட்டு எனது பெற்றோர் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரியல்ல, எனது கணவர் அவரது மனைவியுடன் தொடர்பில் இருந்தது தெரிந்ததால் என்னுடன் வாழ பிடிக்கவில்லை என கூறினார், அதனால் ஆசிட் குடித்தார். எனது கணவர் சிவகாசி, பாலிமர் கம்பெனியில் வேலை

பார்க்கிறார். மாதம் ரூ.12,000/— சம்பளம் வாங்குகிறார்.

3) எதிர்மனுதாரர் சிவகாசி பாலிமர் கம்பெனியில் பணிபுரிந்து மாதம் ரூ.30,000/— சம்பளம் வாங்குவதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ரூ.30000/— சம்பளம் வாங்குவதாக எனக்கு தெரிய வந்ததால் அவ்வாறு சொல்லியுள்ளேன். நான் விபரம் சொல்லி தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் ரூ.30000— சம்பளம் வாங்கி வருகிறார் என்றும், அதன் விபரம் தெரிந்தும் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்வதற்காக எனது கணவர் ரூ.12,000/— சம்பளம் வாங்குவதாக பொய்யாக மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோர்கள் எனக்கு இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, எனது கணவருக்கு பல்சர் இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தார்கள்.

4) எனது கணவருக்கு பல்சர் இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்ததாக மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் என்னுடன் சண்டையிட்டு ஸ்குரு டிரைவரால் குத்த வந்ததாக சொல்லியுள்ளது குறித்து காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாகர்கோவிலில் உள்ள எனது தாத்தா வீட்டிற்கு செல்வதாகவும், நான்கு நாட்கள் கழித்து எதிர்மனுதாரர் குடும்பத்தார் கண்டித்து என்னையும், எதிர்மனுதாரரையும் சேர்த்து வைத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிவகாசியில் தனிக்குடித்தனம் இருந்தேன். அப்போது எதிர்மனுதாரர் என்னுடன் சண்டை போட்டு எனது வயிற்றில் குத்த வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) இது சம்மந்தமாக சிவகாசி காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனது தாயார் ஜமீன்சல்வார்பட்டியில் உள்ள கார்த்திக் பயர் ஆபிஸ்–ல் வேலை பார்க்கிறார். நானும் அந்த பயர் ஆபிஸ்–ல் வேலை பார்த்து வருகிறேன். நான் அடிக்கடி எனது கணவருடன் சண்டை போட்டு பயர் ஆபிஸ்–க்கு வேலைக்கு செல்வேன் என்றால் சரியல்ல. மேற்படி பயர் ஆபிசில் வேலை பார்க்கும் டிரைவர் ஒருவருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது என்றும் அது குறித்து எனது கணவர் என்னை கண்டித்த போதும் அவரை நான் தரக்குறைவான வார்த்தைகளால் பேசினேன் என்றால் சரியல்ல, அவ்வாறு எதுவும் இல்லை யாருடன் பேசினாலும் சந்தேகப்பட்டு எனது கணவர் பேசுவார். 07.11.2023ம் தேதி எதிர்மனுதாரர் என்னையும் எனது தாயாரையும் அடித்து காயப்படுத்தியதாக விருதுநகர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

6) எதிர்மனுதாரர் பலமுறை என்னை சேர்ந்து வாழ அழைத்தும் நான் சேர்ந்து வாழ செல்ல மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் கார்த்திக் என்ற நபருடன் பேசி கொண்டிருந்த போது எனது கணவர் பலமுறை கண்டித்தும் கேட்காததால் எனது கணவர் ஆசிட் குடித்தார் என்றால் சரியல்ல. நான் குடும்ப பொறுப்பில்லாமல் செல்போன் கையுமாக இருந்ததை எனது கணவர் கண்டித்ததால் நான் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 14.10.2023ம் தேதி எதிர்மனுதாரர் வேலை முடித்து வீட்டிற்கு வந்தபோது நான் செல்போனில் பேசிகொண்டிருந்ததை கண்டித்தற்கு 15.10.2023ம் தேதி விருதுநகர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்தேன்

என்றால் சரியல்ல.

7) நான் அடிக்கடி எனது கணவரிடம் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியே சென்று விடுவேன் என்றால் சரியல்ல. நான் பட்டாசு ஆலையில் வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு வேறு எங்கோ சென்று வந்தேன் என்றால் சரியல்ல. நான் வெளியே சுற்றுவதை எனது கணவர் கண்டிததற்கு 07.11.2023 ம் தேதி எனது கணவர் மீது அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 07.11.2023 ம் தேதி புகார் கொடுத்ததாக சொல்லும் புகார் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது பெற்றோருக்கு தத்து குழந்தை என்றால் சரிதான். நான் பொய்யான காரணங்களை கூறி மனு தாக்கல் செய்துள்ளதால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு நடக்க முடியாமல் அவரது வீட்டில் உள்ளார் என்றால் அது குறித்து கேள்விப்பட்டேன். நான் சென்று பார்க்கவில்லை. தற்போதும் எனது கணவர் என்னுடனும் எனது குழந்தைகளுடனும் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் பொய்யான துர்போதனைகளை கேட்டு எனது கணவருடன் சண்டை போட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.